எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தக் கடைகளுக்கு இதுபோன்ற வசதி வேண்டும் என்று குறிப்பிட்டுச் சொன்னால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு) பஞ்சாயத்துகளில் உள்ள அனைத்துக் கடைகளுக்கும் செய்ய முடியாது. பக்கத்திலேயே கடையைக் கொடுத்தாகிவிட்டது, எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. அதுபோன்று இருந்தால், துறைரீதியாக ஆய்வு செய்து, கூடுதலாகக் கடைகள் அமைக்கப்படும். மலைப் பிரதேசமாக இருந்தால், மக்கள் எளிதில் அணுக இயலாத கடைகளாக இருந்தால், போக்குவரத்து வசதி இல்லாமல் இருந்தால், கடை வெகு தூரத்தில் இருந்தால், அதுபோன்ற இடங்களைக் கண்டறிந்து இன்னும் கூடுதலாக நகரும் நியாய விலைக் கடைகளை அமைப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, உறுதியாக துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 263, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

263—

தரம் உயர்த்துதல்

***7250—திரு. ப. பலராமன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சியில் உள்ள 33 KVA துணை மின் நிலையத்தை 110 KVAதுணை மின் நிலையமாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொன்னேரி தொகுதி, பொன்னேரி பேரூராட்சியில் உள்ள 33 KVA துணை மின்

நிலையம் 110 KVA துணை மின் நிலையமாக தரம் உயர்த்தப்படுமா என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அவருடைய கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.

திரு. ப. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவின் இமயம், ஆளுமையின் சிகரம், தமிழகம் தலைநிமிர, தமிழர்கள் தம் வாழ்வு உயர தன்னலம் கருதாது உழைத்திட்ட எங்கள் திராவிடத் தாய், எங்கள் ஊனில், உயிரில், உணர்வில் கலந்திட்ட (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வத் தாய், கழகத்தையும், கழக ஆட்சியையும், எங்களையும் என்றும் காத்து நிற்கும் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, எதிர்வரும் சவால்கள் அனைத்தையும் எதிர்கொண்டு, வீறு கொண்ட வேங்கையென வீர நடை போட்டு வெற்றியோடு பவனி வரும் ஏழைகளின் தோழன், பாட்டாளிகளின் பாதுகாவலன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அன்பின் திருவுருவமாய், ஆற்றலின் மறுவடிவமாய், பண்பின் இருப்பிடமாய்த் திகழ்ந்து, ஆட்சிக்கும், கட்சிக்கும் அருந்துணையாய் விளங்கும் அன்பு அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தனது விரல் நுனியில் மின்சாரத் துறையின் அனைத்து விவரங்களையும் வைத்திருக்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் திரு. தங்கமணி அவர்களையும் வணங்கி, இப்பேரவையில் பேச எனக்கு வாய்ப்பளித்த அன்புக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட பொன்னேரி பேரூராட்சியில் தற்போது அமைந்துள்ள 33/11 கே.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 110/11 கே.வி.ஏ. துணை மின் நிலையமாக தரமுயர்த்திட போதிய இடவசதி ஏற்கெனவே அங்குள்ளது. தற்போதைய சூழ்நிலையில், பொன்னேரி பேரூராட்சியைச் சுற்றிலும் சுமார் 1 இலட்சம் மக்கள் வசிப்பதாலும், சிறிய தொழிற்சாலைகள் பெருகி வருகின்ற காரணத்தாலும், அடிக்கடி மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுகின்றது.

2018 ஜூலை 4]

இந்நிலையில், மின் பற்றாக்குறை நீங்கி, மின் நுகர்வோர் 24 மணி நேரமும் தங்குதடையின்றி மின்சார வசதி பெற ஏதுவாக, 33/11 கே.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 110/11 கே.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையமாக விரைவில் தரமுயர்த்தி வழங்கிட வேண்டும். இதன்மூலம், இங்குள்ள 40 ஆயிரம் வீட்டுமனைகளும், 2 ஆயிரம் விவசாயப் பெருங்குடி மக்களும், 1,500 குறு, சிறு தொழிற்சாலைகளும் பயன்பெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையத்தில்* 3x8 transformers *இருக்கின்றன. அதில்* load *அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், இப்போது 110/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான* proposal *வந்திருக்கின்றது. அதனையடுத்து, உடனடித் தீர்வாக 8* M.V.A. *என்பதை 16* M.V.A. *ஆக மாற்றிக் கொடுப்பதற்கு அரசு உத்தரவிட்டிருக்கின்றது. அது கூடியவிரைவில் நடக்கும். அதேநேரத்தில் அங்கே இடம் இருக்கின்ற காரணத்தினால் 110/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைப்பதற்கும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்று ஏற்கெனவே சொன்னேன். அதற்கு முன்மொழிவு தயாரித்து ஓராண்டு காலத்திற்குள் அந்தப் பணியை நிறைவேற்றுவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

திரு. ப. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதிக்குட்பட்ட ஆரணி பேரூராட்சியில் சுமார் 25,000 பொதுமக்களும், அதைச் சுற்றியுள்ள சின்னம்பேடு, மல்லியங்குப்பம், போந்தவாக்கம், வடக்குநல்லூர், பணப்பாக்கம் ஆகிய 10–க்கும் மேற்பட்ட கிராமங்களிலுள்ள பொதுமக்களும், விவசாயிகளும் பயன்பெறும் வகையில்* IPDS (Integrated Power

Development Scheme) ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இந்திய அரசின் நகர்ப்புற மின் பகிர்மான மேம்பாட்டு முன்னுரிமைத் திட்டம் ஆகியவற்றின்கீழ் சின்னம்பேடில் 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டும்; அதற்குரிய நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நெசவாளர்கள் பெரும்பான்மையானோர் வசிக்கின்ற காரணத்தால், அவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டும், அதைச் சுற்றியுள்ள விவசாயக் குடும்பங்கள் பயன்பெறுவதற்கும் இத்திட்டத்தின்கீழ் அரசூர், நாலூர் போன்ற பகுதிகளுக்கு 110/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மாவின் அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொன்னேரி பகுதியில் மின்னழுத்தம் குறைவாக இருப்பதால், 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையத்தை 110/11 கே.வி.ஏ. துணை மின் நிலையமாக தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டார்கள். அதை உடனடியாக அரசு பரிசீலிக்கும் என்று சொன்னேன். இப்பொழுது அருகில் இருக்கின்ற கிராமங்களுக்கும் அதேபோன்று வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு ஊருக்கும் துணை மின் நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. எந்தப் பகுதியிலே மின் தேவை அதிகமாக இருக்கின்றதோ அந்தப் பகுதிக்குச் செய்யலாம். இப்பொழுது 110 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்கின்றபொழுது, அந்தப் பகுதியிலிருந்து பிற பகுதிகளுக்கு சீரான மின்சாரம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் இப்போது இன்னோர் இடத்திற்கு 110/11 K.V.A. துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். துணை மின் நிலையம் என்பது ஊர் ஊராக அமைக்கப்படுவது கிடையாது. அந்தந்தப் பகுதியிலே மின் தேவை எவ்வளவு இருக்கின்றதோ அதை ஆய்வு செய்து, அந்த அடிப்படையிலேதான் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த துணை மின் நிலையத்தை 110 கே.வி.ஏ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித் தரும்போது மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற மற்ற பகுதிகளுக்கெல்லாம்

சீரான மின்சாரம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகின்றேன். அதேபோல், எங்களையெல்லாம் வாழ வைத்து, இந்த மாபெரும் சபையில் அமர வைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். அதேபோல், அம்மா அவர்களுடைய அரசை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தமிழக முதல்வர் அவர்களையும், அவருக்கு உற்ற துணையாக இருக்கக்கூடிய நம்முடைய துணை முதல்வர் அவர்களையும் வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற இருக்கின்ற ஆதி திராவிடர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொள்ளவிருக்கக்கூடிய எங்களுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திருமதி ராஜலெட்சுமி அவர்களையும் வாழ்த்தி வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மின் பகிர்மானக் கோட்டத்தை தென்காசி மின் பகிர்மான வட்டமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். ஏனென்றால், தென்காசி மின் பகிர்மானக் கோட்டமானது 1965-ல் உருவாக்கப்பட்டது. அது 30, 35 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள ஒரு பகுதி. அதுமட்டுமல்ல, அங்கு சுமார் 1,67,000 மின் இணைப்புகள் உள்ளன. அதனுடைய வருமானம் சுமார் 5 கோடிக்கும்மேல் இருக்கின்றது. அந்தப் பகுதியில் அதிகப்படியான காற்றாலைகளும் அமைந்துள்ளன. கிட்டத்தட்ட 300 மெகா வாட்டுக்கும்மேல் அங்கே மின் உற்பத்தியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த தென்காசி மின் பகிர்மானக் கோட்டத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் இப்படி விரிவாகப் பேசினால் மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கிடைக்காதல்லவா! அதையும் பாருங்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *தென்காசி மின் பகிர்மானக் கோட்டமானது திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்திற்குட்பட்டது. திருநெல்வேலி மின் பகிர்மான வட்டமானது கிட்டத்தட்ட 7 கோட்டங்களை உள்ளடக்கியுள்ளது. அதுமட்டுமல்ல, தற்போது ஆலங்குளத்தில் புதிதாக மின் பகிர்மானக் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆக, 8 பகிர்மானக் கோட்டங்களைக் கொண்டு, பெரிய அளவிலான பகுதியாக திருநெல்வேலி மின் பகிர்மான வட்டம் உள்ளதால், தென்காசி மின் பகிர்மானக் கோட்டத்தோடு கடையநல்லூர், சங்கரன்கோவில், தென்காசி, ஆலங்குளம் ஆகிய 4 கோட்டங்களையும் ஒன்றாக இணைத்து, தென்காசியை மையமாகக் கொண்டு ஒரு புதிய மின் பகிர்மான வட்டமாக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—25

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தென்காசி பகுதியில் ஒரு புதிய வட்டம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நுகர்வோரினுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலேதான் அங்கே வட்டங்கள் பிரிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 4 கோட்டங்களை இணைத்து ஒரு வட்டமாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதுகுறித்து அதிகாரிகளோடு ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுவரை உங்களுக்கு ஒரு மூலக் கேள்வி, 2 துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்பு கொடுத்திருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்,*

2018 ஜூலை 4]

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லாம் list–ஐ பார்த்துத்தான் allow செய்கிறேன். (குறுக்கீடுகள்) நான் ஒன்றும் தவறாகச் சொல்லமாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் தவறாகப் பேசாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லாவற்றையும் நான் பார்த்துவிட்டுத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பார்த்துவிட்டுத்தான் நான் அடுத்த கேள்விக்குச் செல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னை உங்கள் சௌகரியத்திற்குப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்பதற்காக எப்படி வேண்டுமானாலும் பேச வேண்டாம்.

வினா வரிசை எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

264—

சாலையைச் சீரமைத்தல்

***6170—திரு. கே. பழனி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, வல்லக்கோட்டை முதல் மேட்டுப்பாளையம் வரையுள்ள சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், வல்லக்கோட்டை முதல் மேட்டுப்பாளையம் வரையுள்ள சாலை, 2017–2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவிற்கிணங்க அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.